Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹூ ஆனி மீ 03 உ திங்கட்கிழமை (17 – 6 – 1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 194

# சிங்கள அரசு தேடி வரட்டும்; நாம் தேடிப் போகமாட்டோம்!



பாலசிங்கம்

## பேச்சுவார்த்தை நிலைப்பாடு குறித்து அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

பேச்சுவார்த்தை சம்பந்தமாக எமது நிலைப்பாட்டைச் சிங்கள அரசிடம் தெரிவித்துவிட்டோம். இனிமேலாவது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற உண்மையான விருப்பம் இருந்தால் சிங்கள அரசு எம்மைத் தேடி வரட்டும். நாம் அவர்களைத் தேடிப் போகமாட்டோம்.

இவ்வாறு, இன்றைய அரசியல் நிலைமை குறித்தும், பேச்சுவார்த்தை சம்பந்தமான நிலைப்பாடு குறித்தும் விளக்கம் அளித்துப் பேசுகையில்—

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

முற்றவெளியில் நேற்று நடந்த முத்தமிழ் விழா இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழகத்தில் முழு வெற்றி

தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளையும் அ.தி.மு.க. — காங்கிரஸ் கூட்டணி கைப்பற்றும் நிலையில் இருக்கிறது.

★ பிந்திய செய்தி:

## தப்பினார் கருணாநிதி!

முன்னாள் முதலமைச்சரும் தி. மு. க. தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி துறைமுகம் சட்டசபைத் தொகுதியில் 890 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றுவிட்டார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரான சுப்பு 30,042 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

# அ. தி. மு. க.-இ. காங்கிரஸ் தமிழகத்தில் பெருவெற்றி!

## ஜெயலலிதா புதிய முதலமைச்சராவார்

சென்னை, ஜூனை 17

தமிழக சட்டசபைத் தேர்தலில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக — இந்திரா காங்கிரஸ் கூட்டணி வரலாற்றில் இல்லாத பெருவெற்றியை ஈட்டியிருக்கிறது.

நேற்று நள்ளிரவு வாக்குகள் எண்ணப்பட்டுக்கொண்டிருந்த போது — தேர்தல் நடைபெற்ற 232 தொகுதிகளில் 95 சத வீதமானவற்றில் இக் கூட்டணி வேட்பாளர்களே முன்னணியில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் அ. இ. அ. தி. மு. கவின் பொதுச்செயலாளர் செல்வி. ஜெயலலிதா தமிழகத்தின் புதிய முதலமைச்சராகத் தெரிவு செய்யப்படுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

இந்தத் தேர்தலில் கலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# 17 படையினர் பலி!

கொழும்பு, ஜூன் 17

வவுனியா, சின்னத்தம்பனையில் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் விடுதலை புலிகளுடன் நடந்த கடும் சண்டையில் அரசபடையினர் 17 பேர் கொல்லப்பட்டனர். 31 பேர் படுகாயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்புப் படைவட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன.

இந்தமோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எட்டுப் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

குண்டுவீச்சு விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றின் உதவியுடன் முன்னேற முயன்ற படையினரை விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்திய போதே இப்பகுதியில் கடும் சண்டை மூண்டது என்பது தெரிந்ததே. (உ-எ)

## வவுனியாப்பகுதி மோதலில் 8 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வவுனியாப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து பெண்போராளிகள் உட்பட எட்டுப்பேர் வீரமரணமடைந்தனர்.

வீரமரணம் அடைந்த போராளிகளின் விவரம் வருமாறு:-

★ லெப்டினன்ட். ரவி — (குமாரசாமி சந்திரகுமார்— துன்னாலை வடக்கு)

★ லெப்டினன்ட் தவகுமார்— (கிருஷ்ணபிள்ளை சிவபாலசுந்தரம்— கொக்குத் தொடுவாய்)

★ கீதன்— (சத்யா பிரபாகரன்— மன்னார்)

★ சுஜாதா— (அனுஷ்யா யோகராஜா— பருத்தித் துறை)

★ ஜீவமலர்— (துளசி கணேசசுந்தரம்— நல்லூர்)

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ ஹெலிக்கொப்டர் வவுனியாவில்நொருங்கியது

கொழும்பு, ஜூன் 17

மன்னார்— வவுனியா மாவட்டக் காடுகளில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று வீழ்த்தப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஹெலிக்கொப்டர் நொருங்கியதில் அதிலிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்த ஹெலிக்கொப்டரை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினரா அல்லது — அது விபத்துக்குள்ளாகி விழுந்து நொருங்கியதா என்பதை இச்செய்தி எழுதும் வரை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப... துறைமுகத்திலை மானம் கப்பல் ஏறாமல் தப்பியிட்டுது எண்டு சொல்லுங்கோ...!

# இப்போது பேசவில்லையானால் பின்னர் தமிழரசுடன்தான் பேசவேண்டி வரும்!

## பிரபாகரன் கூறியது இது

யாழ்ப்பாணம், ஜூன் 17

ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை நடத்துவதானால் இப்போது அதனைச் செய்ய வேண்டும். அது குறித்து முடிவில்லாமல் நீண்ட காலம் இழுத்தடித்து வருமானால், பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேச முடியாது, [illegible] ழத்தில் அமையும் [illegible] டன் தான் பேசவேண்டி வரும் —

இவ்வாறு விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் தம்மிடம் சமீபத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டதாக — [illegible] அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று யாழ். முற்றவெளியில் நடந்த முத்தமிழ் விழாவில் பேசுகையில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சிங்கள அரசு பிரச்சினைக்கு என்ன செய்கிறது என்று தலைவர் பிரபாகரன் தன்னிடம் கேட்டதாகவும்—

அதற்குத் தாம், ''பிரேமதாசா பிரச்சினைகளைத் தீர்க்கமாட்டார்; எதையும் இழுத்தடித்தே வரும் சுபாவமுள்ளவர். அதேபோன்று தமிழர் பிரச்சினைத் தீர்வையும் இழுத்தடித்து வருகிறார். பேச்சுவார்த்தைக்கு முகம் கொடுக்காது தட்டிக்கழிப்பதற்கே அவர் அவ்வாறு இழுத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலையின் மர்மம் விரைவில் வெளியாகுமாம்!

புதுடில்லி, ஜூன் 17
ராஜீவ்காந்தி கொலையைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் கைதான ஈழத் தமிழர்களில் ஒருவரான சங்கர் என்பவர் அக்கொலை பற்றி புதிய தகவல்களை கொடுத்துள்ளார் என்று புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இத்தகவலை தனது புதுடில்லிச் செய்தியாளர் எட் மண்ட் ரோயை மேற்கோள் காட்டி ஆஸ்திரேலிய வானொலி நேற்று மாலை வெளியிட்டது.

கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் மற்றும் சங்கர் கொடுத்த தகவல்கள் மூலமும் கொலைச் சம்பவத்தின் போது உயிரிழந்த படப்பிடிப்பாளரின் கமராவில் இருந்த பிலிம் சுருளின் உதவியுடனும் ராஜீவ் கொலை பற்றிய மர்மம் இன்னும் சில தினங்களில் வெளியாகிவிடும் என்றும் புலனாய்வு அதிகாரிகள் கூறினர் என்றும் ஆஸ்திரேலிய வானொலி தெரிவித்தது..

[உ-எ]

## விபுலாநந்தர் நூற்றாண்டு நிறைவு விழா

கொழும்பு ஜூன் 17
சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு நிறைவு விழா எதிர்வரும் ஜூலை 19ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

சுவாமி விபுலாநந்தர் பற்றி மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை எழுதிய ஆங்கில நூல் அன்றைய தினம் வெளியிடப்படவுள்ளது.

[இ-எ]

## முத்திரைகள் போதிய அளவு கையிருப்பில்

யாழ்ப்பாணம், ஜூன், 17
'யாழ். பிரதம தபால் நிலையத்தில் போதிய அளவு முத்திரைகள் கையிருப்பில் உள்ளன. ஆனால் அவை விற்பனையாவது குறைவு.
—இப்படிக் கூறினார் பிரதம தபால் நிலைய அதிகாரி.

போதிய முத்திரைகள் உள்ளதால் மக்கள் கூடுதல் விலைக்கு வாங்கத் தேவை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## உருத்திரபுரம் பகுதியில் ஆனையிறவு ஷெல்கள்!

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 1-30 மணியளவில் ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் பகுதியில் விழுந்து வெடித்தன. ஷெல் வீச்சுக்கு இலக்காகி யுவதி ஒருவர் காயம் அடைந்தார்.

இதேவேளை —
ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் சுற்றுப்புற குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு, தட்டுவங்கொட்டி, உமையாள்புரம் ஆகிய பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. (ஓ-76-15)

## வயோதிபரின் சடலம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் நாவலர் வீதிப் பக்கமாக நேற்றுக் காலை வயோதிபரின் சடலம் ஒன்று கிடக்கக் காணப்பட்டு, அப்பகுதி மக்களால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 75 வயது மதிக்கத்தக்க இவ்வயோதிபரின் சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஓ(-15)

## வேட்டைத் துப்பாக்கி வெடித்து காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வேட்டைக்குச் சென்றுகொண்டிருக்கும் போது கொண்டு சென்ற துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் அவருடன் கூடச்சென்றவர் காயமடைந்தார்.

வவுனியா இரணை இலுப்பைக்குளத்தில் கடந்த திங்கள் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அம்பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசேந்திரம் [வயது 20] என்பவரே காயமடைந்தவராவர்.

காயமடைந்தவர் யாழ். போதானா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ]இ-15]

## நெல்லியானில் ஷெல்!

சுழிபுரம், ஜூன் 17
நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் காரைநகர்ப் பகுதி இராணுவத்தினர் பொன்னாலைப் பகுதியை நோக்கி நான்குக்கும் அதிகமான ஷெல்களை ஏவினர்.

நெல்லியானில் குடியிருப்புப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் ஐந்து ஆடுகளும் ஒரு மாடும் உயிரிழந்தன.

பொன்னாலை ,நெல்லியான் பகுதி மக்கள் இரவு வேளையில் இடம்பெயர்ந்திருந்த காரணத்தினால் பெருஞ் சேதம் தவிர்க்கப்பட்டது. (உ-28)

## 'சீல்' வைப்பு

தென்மராட்சி, ஜூன் 17
நிறை குறைந்த பாண்களைத் தயாரித்த பேக்கரிகள் விடுதலைப் புலிகளின் கண்காணிப்புக் குழுவிடம் சிக்கிக்கொண்டன. அதை அடுத்து அந்த பேக்கரிகள் 'சீல்' வைக்கப்பட்டுவிட்டன. [ஓ-117[

## அன்பளிப்பு

நாவற்குழி மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் நடத்தப்படவுள்ள புதிய தையல் பயிற்சி வகுப்பு சர்வகச்சேரி உதவி அரசாங்க அதிபர திரு. பூ. சுந்தரம் பிள்ளையினால் நாளை மறுதினம் [புதன்] ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப் பயிற்சிக்கான தையல் இயந்திரம் கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [ஓ-117]


# நலமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி "ஷப்றா"

உங்கள் நிதி வளத்தைப்பெருக்க
எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்.




கடந்த நான்கு ஆண்டுகளுக்கான நிதி நிலை விவரம்

| | 1986/87 ரூபா 000 | 1987/88 ரூபா 000 | 1988/89 ரூபா 000 | 1989/90 ரூபா 000 |
|---|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11,320 | 14,355 | 23,207 | 23,636 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100,577 | 110,898 | 116.890 | 141,748 |
| வங்கிக் கடன்கள் | 7,718 | 6.540 | 11,364 | 17,981 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16,613 | 14.832 | 13,700 | 19,488 |
| வங்கி மீதிகள் | 10,912 | 3.189 | 1,894 | 2,952 |
| மொத்தச் சொத்துகள் | 127,176 | 143,823 | 162,240 | 193,265 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19,288 | 23,174 | 23,701 | 23,434 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16,881 | 20,025 | 20,833 | 22,351 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,307 | 3,148 | 2,868 | 1,083 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1,775 | 1,508 | 754 |

பணிப்பாளர் சபை

எஸ். பீ. ஈ. கருணாரட்ண
சட்டத்தரணி, சமாதான நீதிவான். (தலைவர்)

எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்

ஜே. டி. நவரட்ணம்
A. I B. (Lond.) பொதுமுகாமையாளர்

ஏ. எம். எச். பாரி.
B. A. (Hons.)

ஆர். பாலசுப்பிரமணியம்.

## ஷப்றா
## யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

2, ஆர்.ஏ டீ மெல் மாவத்தை, கொழும்பு 0
தொலைபேசி 508 87/90

207, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

[சி-5115]


# மரண அறிவித்தல்கள்

## கணேசசுந்தரன் ஸ்ரீதுளசி

கணேசசுந்தரன் ஸ்ரீதுளசி (ஜீவமலர்) 15-06-91 அன்று வீரமரணம் அடைந்தார்.

இவர் கணேசசுந்தரன் - சண்முகவடிவு ஆகியோரின் அன்பு மகளும், ஸ்ரீமுருகதாஸ், ஸ்ரீகௌரி (இராமநாதன் நுண்கலைப்பீடம்), ஸ்ரீமனோஹரி, ஸ்ரீகண்ணதாஸன் (இராமநாதன் நுண்கலைப்பீடம்), ஸ்ரீகுகதாஸன், ஸ்ரீதேவி, ஸ்ரீமோகனதாஸ், ஸ்ரீரஜனி, ஸ்ரீமயூரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருபானந்தன், சிவராம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிஷாந்தன், ரூபிகா, கோபிகா ஆகியோரின் அன்புச் சித்தியும், சுப்பையா, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புப் பேத்தியும், பகவதி, ரெட்ணாம்பாள், கணேசன், ஜெயசிங்கம், லோகாம்பாள், ரங்கன் சரோஜினி ஆகியோரின் பெறாமகளும், அருணா, சண்முகரெட்ணம், சுந்தரராஜன், விமலா, லீலா, மாலா ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் 16-6-91 அன்று மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல் :
சுப. கணேசசுந்தரன் குடும்பத்தினர்
அரசடி வீதி,
நல்லூர். (17105)

## ஸ்ரனிஸ்லாஸ் யோசேப்

(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி)

ஸ்ரனிஸ்லாஸ் யோசேப் 16-6-91இல் காலமானார். இவர் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆனைக்கோட்டை - உயரப்புலத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், மரியதாஸ் (பொலீஸ் உத்தியோகத்தர்), மரியபேனாட் (இத்தாலி), அன்ரனி அல்பிறேற் (பொலீஸ் உத்தியோகத்தர்), இ. மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோ. இம்மானுவேல் (மரியதாஸ்) (சவுதி), ம. சந்திரமலர் (ஆசிரியை), அ. றெஜினா (இத்தாலி), அ. மார்த்தா ஆகியோரின் அன்பு மாமனும், நளினி, தயானி, யுனிற்றா, றூபினா ஆகியோரின் பேரனும், சவினம்மாவின் அன்புச் சகோதரனும், மி. பேரின்பநாயகம் (இளைப்பாறிய பொலீஸ் அதிகாரி-கனடா), சி. புஸ்பம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் அடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :
இ. மலர் (மகள்)
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. [17103]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17/06/1991 பக்கம் — 3

# போராட்டத்தை எவராலும்! நசுக்க முடியாது

## யாழ். விழாவில் ஆர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 17
ஸ்ரீலங்கா அரசு பல ஆண்டு காலமாக எமது இனத்தை, மொழியை, பண்பாட்டை அழித்தொழிக்கும் முயற்சியில் திட்டமிட்டு, செயற்பட்டு வருகின்றது. மொழியை வளர்க்க, இனத்தைக் காக்க, இறைமையை மீட்க போராடி வரும் எம்மினத்தின் போராட்டத்தை எந்த வகையிலாவது நசுக்கி விட முயல்கின்றது இது முடியாத காரியம்.

யாழ். முற்ற வெளியில் அமைந்துள்ள 'மாவீரர்' கலை அரங்கத்தில் நடைபெற்ற 9ஆம் நாள் முத்தமிழ்விழா நிகழ்ச்சிகளில் உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

எங்கள் மொழி தளர்ந்த நிலையில் போராட்ட உச்சக் கட்டமான இக் காலத்தில் நாம் மொழியை வலுப்படுத்த, மீண்டும் கட்டி எழுப்ப விழா எடுக்கின்றோம்.

தமிழ் வளர்ப்புக்கென முன்பு எத்தனையோ விழாக்கள் எடுக்கப்பட்டன. அவை யாவும் அந்நிய கலாசாரக் கலப்பிலும், மேனாட்டு மோகத்திலும் ஊறிய கலப்பு விழாக்களாக இருந்தன. அவற்றின் மத்தியில் எமது இந்த விழா தனித்துவம் வாய்ந்த ஒரு விழாவாகும்.

ஸ்ரீலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கு மத்தியில் விழா நடைபெறுகிறது. எம் மண்ணின் உயிர்நாடியான எம் மொழியில் அந்நிய மொழிச் செருகல், கலப்புக்கள் ஒழிக்கப்பட வேண்டும்.

ஆக்கிரமிப்புக்குள்ளான ஒருதேசத்தின் மொழி பூரண வளர்ச்சி அடைய கருதமுடியாது. அழிந்து வரும் கலைகளை நிலைநாட்ட, மொழியை வளர்க்க அந்நிய ஆதிக்கத்திலிருந்து தேசத்தை மீட்டெடுக்க வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் ஆண்-பெண் என்ற பாகுபாடின்றி ஒருமித்து நடத்தி எமது மண்ணை மீட்டெடுக்க முன்நிற்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

[இ-3-15]

## அடுத்த மாதம் தொடக்கம் இருநேர வகுப்புகள்

கொழும்பு, ஜூன் 17
அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் சகல பாடசாலைகளிலும் இரு நேர வகுப்புகள் கட்டாயமாக நடத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதற்கான சுற்று நிருபம் ஒன்றை கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு அனுப்ப உள்ளது.

இது வரை மாலைநேர வகுப்புகளை நடத்துவதற்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விசேஷ அலவன்ஸ் இனி வழங்கப்பட மாட்டாது என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

[இ-எ]

யா/ வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம்

தற்காலிக காவலாளி நியமனம்

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 25 – 06 – 91 க்கு முன் தமது சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பத்தை பாடசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

சேர் வை. து. ம. ம. வி. —அதிபர்.
வேலணை.
16 – 06 – 91 (17204)

பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின் 32 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19-6-1991 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் மண்டபத்தில் 101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [மக்கள் வங்கி ஒழுங்கை அருகாமை] உப தலைவர் திரு. சி. திருச்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

செ. புவனேந்திரன்
செயலாளர்
]17171]

RADIO T.V & DECK
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்;
22 - 06 - 1991
* இலகு விரிவுரைகள்.
* சிறந்த செய்முறைப் பயிற்சி.
விவரங்களுக்கு:
North Ceylon Technical Institute
14, St. Peter's Lane,
Hospital Road,
Jaffna.
(சி-0135)

## இராவணனுக்கு தெற்கில் சிலை

கொழும்பு, ஜூன் 17
இராவணனின் ஒன்பது அடி உயர சிலை ஒன்றை ஜனாதிபதி பிரேமதாஸா இன்று திங்கள் கதிர்காமம் சிரிவிஹாரை புனிதப் பிரதேசத்தில் திரை நீக்கஞ் செய்து வைப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## உடுவில் பகுதியில் திருட்டு

மானிப்பாய், ஜூன் 17
மருதனார்மடம் – மானிப்பாய் வீதியில் உடுவில் மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக உள்ள மூன்று வர்த்தக நிலையங்களில் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

13 ஆம் திகதி இரவு இச்சம்பவம் நடந்தது.

இரண்டு பலசரக்குக் கடைகளிலும், ஒரு புத்தக நிறுவனத்திலுமே திருட்டுகள் இடம் பெற்றுள்ளன.

இந்த பலசரக்குக் கடைகளில் ஒன்று ஏற்கெனவே பல தடவை திருடர்களின் கைவரிசைக்குள்ளாகி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலநாட்களுக்கு முன்பு மருதனார்மடம் சந்தியில் உள்ள கோவில் மற்றும் நான்கு கடைகளில் இதேபோன்று திருட்டுகள் இடம்பெற்றிருந்தன. இதனைத் தொடர்து உடுவிலில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஏழாம், எட்டாம் கிளைகள், பிள்ளையார் கோவில் ஆகியனவும் கதவு உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டன.

லவ்லேனில் உள்ள தனியார் வீடொன்றிலும் ரேடியோ, சைக்கிள் உதிரிப்பாகங்கள் ஆகியன களவாடப்பட்டிருந்தன.

திருட்டுக்கள்பற்றி விடுதலைப்புலிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

[இ90]

## பல்கலை. கல்லூரிகள் விரைவில் நிர்மாணம்

கொழும்பு, ஜூன் 17
ஒன்பது பல்கலைக்கழகக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கான நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமாகாணம், கிழக்கு மாகாணம், சப்பிரமுவா மாகாணம், வடமத்தியமாகாணம், ஊவாமாகாணம், தென்மாகாணம், மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம், மேல்மாகாணம் ஆகியவற்றிலேயே பல்கலைக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கான பணிப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியஆணைக் குழு, இல. 29, வார்ட் பிளேஸ், கொழும்பு - 07 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## ரயில் பயணிகள் மீது சூடு! 160க்கும் மேலானோர் பலி!!

சண்டிகார், ஜூன் 17
பஞ்சாப் மாநிலத்தில் இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் நூற்றுக்கு மேற்பட்ட ரயில் பயணிகள் சீக்கியத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

லூதியான மாவட்டத்தில் பாதல் ரயில் நிலையத்தில் பெரொஸ்பூர் பயணிகள்ரயில் தீவிரவாதிகளால் வழிமறிக்கப்பட்டது. பின்னர் தீவிரவாதிகள் ரயில் பெட்டிகளுக்குள் நுழைந்து கண்மூடித்தனமாகச் சுட்டதில் அந்த இடத்தில் 48 பேர் இறந்தனர்.

அந்த மாவட்டத்தில் கிலிரெய்பூர் ரயில் நிலையத்தில் இன்னொரு பயணிகள்ரயிலை தீவிரவாதிகள் மறித்து பயணிகள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அப்போது அந்தஇடத்தில் 26 பயணிகள் உயிரிழந்தனர்.

அந்த இரண்டு சம்பவங்களிலும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 125ஐத் தாண்டி விட்டது என்று பி. பி. சி. அறிவித்தது,

அச்சம்பவங்கள் கடந்த சனிக்கிழமை இரவு 9.40 க்கும் 9-50 க்கும் இடையில் இடம் பெற்றன.

[இ-எ]

### ராஜீவ் கொலை விசாரணை

## இலங்கை உட்பட வேறு நாடுகளுக்கும் விஸ்தரிப்பு

ராஜீவ் காந்தி கொலை பற்றிய விசாரணை இலங்கை உட்பட சில வெளிநாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக இந்திய மத்திய புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.

இத்தகவலை புலனாய்வுத் துறை அதிகாரி திரு. வி. கார்த்திகேயன் சென்னையில் வெளியிட்டார்.

ராஜீவ் கொலையின் பின்னால் விரிவான சதித்திட்டம் இருந்ததற்கான தகவல்கள், நளினி மற்றும் முருகன் ஆகியோர் கைதானதைத் தொடர்ந்து தமக்குக் கிடைத்திருப்பதாக திரு. கார்த்திகேயன் மேலும் சொன்னார்.

ராஜீவ் காந்தி கொலையை தனிநபர் எவரும் திட்டமிட்டுச் செய்திருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

விழுப்புரத்தில் இருந்து சென்னை நோக்கி பஸ் ஒன்றில் மாறுவேடத்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது கைதான நளினி (வயது 27) லும் முருகனும் (வயது 18) செங்கல்பட்டு நீதிவானில் 28 நாள் காவலில் வைக்கப்பட்டனர்.

இதேவேளை-ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் கொலைச்சம்பவம் நடந்த இடத்தில் மனித குண்டாக செயல்பட்ட பெண்ணுடன் காணப்பட்ட சிவராசா என்ற வாலிபரை கைது செய்வதற்கு உதவுபவருக்கு 10 லட்சம் ரூபா சன்மானமும், சுபா என்ற பெண்ணைக் கைது செய்ய உதவுபவருக்கு 5 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று மத்திய புலனாய்வுப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

காவலில் வைக்கப்பட்டுள்ள முருகன் என்ற இளைஞர் இலங்கை, சாவகச்சேரியைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. (இ-எ)

## நிமிடத்துக்கு ரூ. 2 கோடி

ஒரு நிமிட நடிப்புக்கு 2 கோடி ரூபா சம்பளம் வாங்கி பிரபல நடிகர் சீன்கோனரி சாதனை புரிந்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

'ரொபின்ஹூட்' படத்தின் இறுதிக் காட்சியில் அரசனாக சீன்கோனரி ஒரு நிமிடம் மட்டுமே நடித்தார். அதற்கு ஐந்து லட்சம் டொலர் அதாவது இலங்கைப் பணத்தில் ரூ. 2 கோடி அவருக்கு வழங்கப்பட்டது. 1987 இல் சிறந்த நடிப்புக்கான ஒஸ்கார் விருது சீன் கோனரிக்கு வழங்கப்பட்டது.

## உலக அதிவேக ஓட்டக்காரர்

வாஷிங்டன், ஜூன் 17
உலகின் அதிவேக ஓட்டக்காரர் என்ற பெயரை லாறி பாரல் என்பவர் சுவீகரித்துக் கொண்டார்.

அமெரிக்காவில் நடந்த தேசிய ஓட்டப் போட்டியில் 100 மீற்றர் தூரத்தை 9. 90 வினாடியில் லாறி பாரல் ஓடி முடித்து இச்சாதனையை ஏற்படுத்தினார்.

1988 சோல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் தூரத்தை 9.92 வினாடிகளில் ஓடி முடித்து கார்ல் லூயி ஏற்படுத்திய உலக சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

ஒ-எ

உதவி ஆங்கில ஆசிரியர்
தெரிவுப் பரீட்சை - 1991

*Examination For Recruitment of English Assistant Teachers*

ஆரம்பம்: 19 - 06 - 1991
புதன் பி. ப. 4 மணி

★ அடிப்படையிலிருந்து துரிதமாகக் கற்பிக்கப்படுவதால் பாடநெறி யாவருக்கும் இலகுவாக இருக்கும்.
★ அச்சடித்த பாடக்குறிப்புகள், வினா-விடையுடன் கிடைக்கும்.
★ கட்டணம் ரூபா 150.00

ஆசிரியர்கள்:-
திரு. K. சபாநாயகம்
திரு. இராஜநாதன் நயில்ஸ்

விவரங்களுக்கு நேரில்:
SELIN INSTITUTE
Irupalai, Kopay.
[பருத்தித்துறை – யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ளது]
[17192]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பால்மாடு கன்றுடன் விற்பனைக்கு உண்டு. இல. 51, சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [4152]

### தேவை

தேங்காய்ச் சிரட்டைகள் தொகையாக தேவை. தொடர்பு கொள்ளவும். ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம், 58, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (17203)

### மணப்பெண்கள் தேவை

பிரான்ஸ் குடியுரிமை பெற்ற இரு ஆண்களுக்கும், சுவிஸ் ஆணுக்கும், கொழும்பு வர்த்தகர் ஒருவருக்கும் 25 வயதிற்கு கீழ்ப்பட்ட மணப்பெண்கள் தேவை. தில்லைநாதர் நடராசா (சுருவில்) (முன்னாள் கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய அதிபர்) 51, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (4151)

### மணமகன் தேவை

சைவ போசன, அரசினர் பாடசாலையில்ஆசிரியையாகவுள்ள பொதுநிறமும், அழகும் உள்ள 1955 ஜூன் மாதம் பிறந்த பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. ஏற்புடையோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டால் மற்றைய விஷயங்கள் நேரில் பேசிக் கொள்ளலாம் விளம்பர இல. 809, C/o உதயன், நாவலர்வீதி, யாழ்ப்பாணம். [4142]

### 'வரதர் மாணவர் அகராதி'

ஆங்கிலம் பயில்வோருக்கு மிகமிக உதவியான 'வரதர் மாணவர் அகராதி' தூய தமிழில் 18400 சொற்களுக்கு கருத்துக்கள். இன்று கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த மலிவான ஆங்கில – தமிழ் அகராதி இதுவே. விலை ரூபா 95/– புத்தக சாலைகளில் கிடைக்கும். தொகையாகப் பெறுவதற்கு ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (4143)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (4116)

### புத்தகம்

Writing Letters in English ஆங்கிலத்தில் கடிதம் எழுதுதல் G. C. E. படிப்போருக்கும், ஆங்கில மொழி மூலம் பல தரப்பட்ட பரீட்சைகளில் தேர்வு நாடுவோருக்கும் உரிய நூல் 70 க்கு மேற்பட்ட மாதிரிக் கடிதங்களைக் கொண்டது. ஆக்கியோன் த. ந. பஞ்சாட்சரம் விலை ரூபா 40/- முன்னணி புத்தக நிலையங்களில் பெறலாம். [17179]

## பிறப்பு அத்தாட்சிப் பத்திர மோசடி

கொழும்பு, ஜூன் 17

பிறக்காத குழந்தைகளின் பேரில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தயாரித்துக் கொடுக்கும் மோசடிக் கும்பல் ஒன்றை கொழும்புப் பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆயிரம் ரூபா வீதம் இந்தக் கும்பலினால் விற்பனை செய்யப்பட்டு வந்தது என்றும் பொலீஸார் தெரிவித்தனர். [இ-எ]

## விண்ணக வாழ்வின் ஓராண்டு



### இறப்பியேல் மேரி கொலஸ்ரிக்கா

அன்னை மடியில்: 20 – 12 – 1967 | ஆண்டவன் அழைப்பில்: 16 – 06 – 1990

அல்லும் பகலும் அயராது நாமுழைத்து
ஆசையாய் அமுதூட்டி வளர்த்த அன்பு மகளே!
நீ சொல்லாமல் சென்றுவிட்ட இடமெங்கே
ஆவலாய் தேடுகிறோம் ஆசை மகளே!


பிரிவால் துயருறும்:

தந்தை, தாய்,
சகோதரர்கள், பெறாமக்கள்,
மைத்துனர், மைத்துனிகள்,
உற்றார், உறவினர்கள்.

25/8, மத்திய கிழக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். [17172]

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரமனே நம

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மாரிமுத்து ஆச்சாரி விஜயகுமார்

(விஜய்)

(யாழ். மத்திய கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவன்)

மலர்வு: 06 – 02 – 1971 | உதிர்வு: 09 – 07 – 1989

திதி: 17 - 06 - 1991

நல்லவர்கள் இவ்வுலகில் வாழ வழி தானிலையோ?
விஜய்! உன் பிரிவால் வேதனை மிகக் கொண்டோம்
ஆண்டு இரண்டல்ல இருநூறு சென்றாலும்
உன்றன் நினைவெமது உளம் விட்டு ஓடாது
அன்புக் கண்ணீரை அடியிணைக்கே அர்ச்சிப்போம்.

09 – 07 – 1989 ஷஷ்டித் திதியில் சிவபதமடைந்த எமது புத்திரன் விஜயகுமாரின் (விஜய்) 2ஆவது நினைவுத் திதியான (17 – 06 – 1991) இன்று ஆத்மசாந்திப் பிரார்த்தனை, கொக்குவில் மேற்கு, பூநாறி லேனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:

அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள்.

கே. மாரிமுத்து ஆச்சாரி,
இல. 164, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [17197]


# Computer Programming In BASIC Language

4 MONTHS

(சனி, ஞாயிறு, வகுப்புகள்)

ஆரம்பம்: 23 - 06 1991

8-30 மணி

LECTURES BY MEMBERS OF THE INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT [LONDON]

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு:

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3 ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (சி-0120)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஐயாராஜ் பர்னாந்து

அன்னை அரவணைப்பில்: 19—03—1933 | ஆண்டவன் அவனியில் 17—6—1989

எம் உயிரான தந்தையே
பிறரின் ஊன்றுகோல் இல்லாமலே
தனித்து ஆலமரமாய் எமைக்காத்து
வளர்த்து ஆளாக்கினீர்களே!
வேரோடு மரம்புரண்டு வீழ்ந்ததுபோல்
பாதியிலே எமைவிட்டுச்
சென்று விட்டீர்களே!
குமுறுகிறோம் உங்கள் நினைவால்
தெய்வமாய் எமைக்காத்து
ஆசீர்வதியுங்கள்!
தங்களின் ஆத்மா ஆண்டவனில்
ஆறுதலடைய அனுதினமும்
வேண்டுகிறோம்!

என்றும் உங்கள் பிரிவால் வாடும்

மனைவி, மக்கள்,
மாமா, மாமி, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்கள்.

57, தேவாலயவீதி,
யாழ்ப்பாணம்.
சி/[0116]

82, கல்லூரி வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு-13

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் தியாகராஜா

[மின்சாரசபை, அலுவலகம் வேலணை]

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் தியாகராஜா அவர்கள் 16-6-1991 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமாகி விட்டரர். இவர் சரோஜினிதேவி [கிளி]யின் அன்புக்கணவரும், சிற்றம்பலம் காலஞ்சென்ற சின்னம்மா அவர்களின் அன்பு மகனும், திருச்செல்வியின் சகோதரரும், காலஞ்சென்ற குழந்தைவேலு [மனேஜர்], செல்லம்மா அவர்களின் அன்பு மருமகனும், மனோகரன் [யாழ்], பத்மலிங்கம், சண்முகலிங்கம், பஞ்சலிங்கம், சிவலிங்கம், சரஸ்வதிதேவி [முரசுமோட்டை], சாந்தாதேவி, குணதேவி, கலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பரமலிங்கம், நித்தியராஜன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 17-6-1991 திங்கட்கிழமை காலை 8மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கேரதீவு மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

த. மனோகரன்
[மைத்துனர்]

இல. 235,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [[17205]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17/06/1991

பக்கம் -5

உதயன்

## எக்காளம் கேட்கிறது!

கொக்கட்டிச்சோலையில், பெண்களும், குழந்தைகளுமாக, 185க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொடூரமாகப் பச்சைப் படுகொலை செய்யப்பட்ட அரக்கத்தனம் அறிந்து உலகம் முழுவதும் கதறி அழுகிறது! இப்படியும் மனிதக் கொடுமையா என்று நாகரிகமும், மனிதாபிமானமும் நிறைந்த மக்கள் காறி உமிழ்கிறார்கள்! ஒரு நாட்டு அரசாங்கப் படை தனது சொந்த நாட்டு மக்களை இப்படி மிருகத்தனமாக, காட்டுமிராண்டித்தனமாகக் கொலை செய்வதுண்டா என்று வியப்போடு, கேட்கிறார்கள்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசுப் படைகளின் தாரதம்மியமும், போர் முறையும், அவற்றுக்கெனப் புறம்பாக உள்ள இராணுவ அகராதியும் எவை என்று தெரிந்தவர்கள் கொக்கட்டிச்சோலைச் சம்பவம் கேட்டுத் திகைப்புற மாட்டார்கள். ஈழத்தமிழர்களும் அவ்வாறே.

இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விடயம் ஒன்றை கொக்கட்டிச்சோலை நிலை நிறுத்தியுள்ளது; நிரூபித்துள்ளது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஒரு தனிச்சக்தியாக அரச படைகள் உருவெடுத்துள்ளன. நாட்டை ஆள்பவராகக் கூறிக் கொள்ளும் ஜனாதிபதியோ அல்லது நாடாளுமன்றமோ அரச படைகள் மீது அதிகாரம் செலுத்த முடியாது; அவற்றுக்கு உத்தரவும் போடமுடியாது.

அரசின் இயக்க இயந்திரத்தில் இராணுவம் ஓர் அங்கமாகி விட்டது. நாடாளுமன்றம், நிர்வாகம், நீதிபரிபாலனம் ஆகிய மூன்றுடன் இராணுவமும் முதலில் சரிசமதையாக இடம் பிடித்துக்கொண்டது. இப்போது முந்திய மூன்றையும்விடச் சக்தியும், அதிகாரமும் மிக்கதாகத் தானே, தன்னைப் "பிரகடனப் படுத்தி" உள்ளது. அதனால் தான் ஜனாதிபதியால் எதனையும் செய்ய முடியவில்லை. இராணுவம் போடும் வட்டத்துக்குள்ளேயே நிற்கவேண்டி உள்ளது. -- என்று இப்பத்தியில் அடிக்கடி கூறி வந்தோம். அது நூற்றுக்கு நூறு வீதம் சரியானது என்பது இப்போது வெளிப்படையாக நிரூபிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி நியமித்த விசாரணைக் குழுவையும், பிரதமர் மற்றும் அவரது அதிகாரிகளையும் கொக்கட்டிச் சோலையில் சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்வதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லை. இது எதனைக் காட்டுகிறது?

படையினர் மீது அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ கட்டுப்பாடு இல்லை. இராணுவம், தான் நினைத்ததைச் செய்யும் அளவுக்கு வளர்ந்துள்ளது. அதன் தயவில் அரசாங்கம் தங்கி இருக்கிறது. தமது பதவி பறிபோய்விடக்கூடாதே என்பதற்காக, தப்புத் தாளம் போட்டுக் கச்சேரி நடத்தி, காலத்தை நகர்த்தும் தந்திரத்தை ஜனாதிபதியும், அரசாங்கமும் கையாண்டு வருகின்றன என்பது, வெட்ட வெளிச்சமாக, நிதர்சனமாகி இருக்கிறது.

மொத்தத்தில்ஜனாதிபதியை, அரசை, அமைச்சர்களை, நாடாளுமன்றத்தை, அதிகாரிகளை, நீதிமன்றத்தை எல்லோரையுமே கையாலாகாதவர்களாக்கி, இராணுவம் எக்காளம் போடுகிறது! இந்த நிலையில் ஸ்ரீலங்காவுக்கு சனநாயகமும் ஒரு கேடா? மனித உரிமை பேணலும் ஒரு பொருட்டா?!

# புதிய தமிழ்நாடு சட்ட சபையில் எதிர்க்கட்சி இல்லாத நிலை!

சென்னை, ஜூன் 17

**தமிழகத்தின் புதிய சட்டசபையில் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி ஒன்று இல்லாத நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**

அ. இ. அ. தி. மு. க.—இந்திரா காங்கிரஸ் கூட்டணி மொத்தத் தொகுதிகளில் 95 சதவீதமானதைக் கைப்பற்றும் நிலை ஏற்பட்டதை அடுத்தே அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி அந்தஸ்தை எந்தக் கட்சியும் பெறமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

சட்டசபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 234 ஆகும். எழும்பூர் மற்றும் முசிரி ஆகிய சட்டசபைத் தொகுதிகளில் போட்டியிடவிருந்த இரண்டு சுயேச்சை வேட்பாளர்கள் இடையில் மரணமாகினர். அதனைத் தொடர்ந்து அத் தொகுதிகளில் தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 232 தொகுதிகளுக்கும் நடந்த தேர்தலில் 223 தொகுதிகளை அ. தி. மு. க. — இந்திரா காங்கிரஸ் கூட்டணி கைப்பற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

தி. மு. கவுக்கு ஆக 6 இடங்களும் பாட்டாளி மக்கள் கட்சிக்கு இரண்டு இடங்களும் ஜனதா தள் கட்சிக்கு ஓர் இடமும் கிடைக்கும் நிலையே நேற்றிரவு இருந்தது, (உ-எ)

## ஜெயலலிதா



சென்னை, ஜூன 17

அ இ. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தாம் போட்டியிட்ட இரு சட்டசபைத் தொகுதிகளிலும் முன்னணியில் இருப்பதாக இன்று அதிகாலையில் அறிவிக்கப்பட்டது.

பர்கூர் தொகுதியில் சுமார் 12 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளையும்—

காங்கேயம தொகுதியில் சுமார் 15 ஆயிரம் அதிக வாக்குகளையும் அவர் பெற்ற இருந்தார்.

# தென் மாநிலத்தில் இருந்தே புதிய பிரதமர் தெரிவாவார்

புதுடில்லி, ஜூன் 17

இந்திரா காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்ற இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதன் சார்பில் புதிய பிரதமராக வரப்போகிறவர் நிச்சயமாக உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்க மாட்டார் என்பது உறுதியாகிவிட்டது.

— இப்படி பி. பி. சி யும் ஆஸ்திரேலிய வானொலியும் புதுடில்லியில் உள்ள தங்கள் செய்தியாளர்களை ஆதாரங் காட்டி அறிவித்தன.

உத்தரப் பிரதேச மாநில சட்டசபைத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சியே கூடுதல் ஆசனங்களை பெற்று வருகிறது.

இரண்டாவது இடத்தை ஜனதாதள் கட்சியும் மூன்றாவது இடத்தையே இந்திரா காங்கிரஸ் கட்சியும் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள 82 நாடாளுமன்றத் தொகுதிகளில் காங்கிரஸ் கூடுதலாக ஆசனங்களைப் பெற முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இதேவேளை —

—மகாராஷ்டிர மாநிலத்தில் காங்கிரஸ் அமோக வெற்றியீட்டி வருகின்றது.

எனவே பிரதமர் பதவிக்கு மகாராஷ்டிர முதலமைச்சர் சரத் பவார் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்பு அதிகரித்து இருப்பதாக ஆஸ்திரேலிய வானொலி அறிவித்துள்ளது.

இதனிடையில் ராஜீவ் அமைச்சரவையில் ரயில்வே அமைச்சராக இருந்தவரான திரு. மாதவராவ் சிந்தியாவை பிரதமராக்கும், முயற்சியில், ரரஜீவுக்கு விசுவாசமான கோஷ்டியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் சிலர் முயல்வதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இதேசமயம்—

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவரும் தற்போது ராஜீவின் இடத்துக்கு காங்கிரஸ் தலைவராகத் தெரிவாகியிருப்பவருமான நரசிம்மராவின் பெயரும் பிரதமர் பதவிக்கு அடிபடுகிறது.

நிச்சயமாக வட இந்தியாவில் இருந்து தெற்குக்கு பிரதமர் பதவி மாறப்போவது தவிர்க்க முடியாத ஒன்று எனவும் அச்செய்திகள் தெரிவித்தன.

### மது தண்டவதே தோற்றார்

வி. பி. சிங் அமைச்சரவையில் நிதி அமைச்சராகப் பணிபுரிந்த — ஜனதா தள் வேட்பாளர் — பேராசிரியர் மது தண்டவதே மகாராஷ்டிர மாநிலம்—ராயப்பூர் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரிடம் தோற்றுப் போனார்.

இந்தத் தொகுதியில் கடந்த நான்கு தேர்தல்களில் பேராசிரியர் மது தண்டவதே தொடர்ந்து வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

### காளிமுத்து கவிழ்ந்தார்!

சென்னை, ஜூன் 17

தமிழக மாநில முன்னாள் அமைச்சர் காளிமுத்து கடலாடி சட்டசபைத் தொகுதியில் மிகக்குறைந்த வாக்குகளைப்பெற்று மூன்றாம் இடத்தில் இருப்பதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவிலிருந்து பிரிந்து தி. மு. கவில் சேர்ந்த அவர் கடலாடித் தொகுதயில் தி. மு. க. வேட்பாளராகப் போட்டியிட்டார். (உ-எ[

## கருணாநிதி



சென்னை, ஜூன் 17

துறைமுகம் தொகுதியில் போட்டியிட்ட தி. மு. கவின் தலைவர் கலைஞர் கருணாநிதி கடும் போட்டிக்கு மத்தியில் முன்னணியில் இருப்பதாக இன்று காலை அறிவிக்கப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளரும் தொழிற்சங்கவாதியுமான சுப்புவுக்கும் அவருக்கும் இடையில் கடும்போட்டி நிலவுகிறது. இருவரும் மாறி

[6 ஆம் பக்கம் பார்க்க]

### நாவலர் வெற்றி!

சென்னை, ஜூன் 17

முன்னாள் அமைச்சரும் அ. தி. மு. க. வேட்பாளருமான நாவலர் நெடுஞ்செழியன் தேனீ சட்டமன்றத் தொகுதியில் 43 ஆயிரத்து 300 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். [உ]

## கட்சிகள் போட்டியிட்ட தொகுதிகள் எண்ணிக்கை

தேர்தல்கள் நடந்த லோக சபைத் தொகுதிகளின் எண்ணிக்கை 511.

பிரதான அரசியல் கட்சிகள் நிறுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கை வருமாறு:-

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | — 483 |
| பாரதீய ஜனதா கட்சி | — 465 |
| சமாஜவாதி ஜனதாக் கட்சி | — 361 |
| ஜனதாக் கட்சி | — 320 |
| கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) | — 64 |
| இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி | — 48 |

(இ-எ)

### முன்னாள் முதல்வர் தோல்வி!

சென்னை, ஜூன் 17

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசசட்டசபையின் மன்னார்குடித் தொகுதியில் போட்டியிட்ட டி. ராமச்சந்திரன் தோல்வியடைந்தார்.

தி. மு. க. வேட்பாளரான இவர் முன்னர் தி. மு. க. அமைச்சரவையில் முதல்வராக இருந்தவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. [உ]

## தேவிலால்



புதுடில்லியில், ஜூன் 17

துணைப் பிரதமரும் சமாஜவாதி ஜனதாதள் வேட்பாளருமான தேவிலால், ஹரியானா லோர்ட்டஸ் நாடாளுமன்றத் தொகுதியில் 6 ஆயிரம் வாக்குககள் அதிகம் பெற்று முன்னணியில் இருப்பதாக நேற்று நள்ளிரவு அறிவிக்கப்பட்டது. [உ]

# கேரள தேர்தலில் கம்யூ. தோல்வி!

கடந்த பத்து ஆண்டுகளாக கேரள மாநிலத்தை ஆட்சி செய்து வரும் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி இம் முறை தோல்வி அடைகிறது.

139 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட சபையில் 87 ஆசனங்களைக் கைப்பற்றும் நிலை இந்திரா காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனும் இடதுசாரி ஐக்கிய முன்னணி 52 தொகுதிகளில் [illegible] முன்னணியில் [illegible]தாக நேற்று இரவு வரை கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

### தமிழ்க்குடிமகன் தோல்வி!

சென்னை, ஜூன் 17

கலைக்கப்பட்ட தமிழக சட்டசபையின் சபாநாயகரும், தி. மு. க. வேட்பாளருமான தமிழ்க்குடிமகன் தாம் போட்டியிட்ட சட்டசபைத் தொகுதியில் தோல்வியடைந்தார்.

தி. மு. கவின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் அன்பழகனும் தோல்வியடைந்தவர்களுள் ஒருவராவார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணா மக்கள் கடல்

# தமிழ் விழாக் கண்டு பூரித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 17

வெள்ளம் போல் தமிழர் கூட்டம் அலை கடல் போலப் பொங்கி எழுந்து, திரண்டு பரந்து விரிந்த காட்சியை இனியும் வாழ்நாளில் காண முடியுமா? இப்படி ஒரு சன சமுத்திரம் இதுவரை கூடிய தில்லை — என்று கூறுமளவுக்கு நேற்று யாழ். முற்றவெளியும் நகரமும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி கரை புரண்டோடின.

முத்தமிழ் விழாவின் பத்தாம் நாளான நேற்று மாலை முதல் இன்று அதிகாலை வரை லட்சக் கணக்கில் மக்கள் இயல், இசை, நாடகத் தமிழ் விருந்துகளை மாந்தி மகிழ்ந்தனர்.

முற்றவெளி என்று சொல்வதற்குப் பதிலாக முழுவதும் தமிழர் தலைகள் அடர்ந்த வெளியாக அது காட்சியளித்தது.

யாழ். நகரப் பகுதியில் இருந்து மட்டுமன்றி, குடாநாட்டின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் எல்லா வயதினரும், எல்லாத் தரத்தினரும், இருபாலாரும் வந்து, ஆலைப் புனலுக்குள் போடப்பட்ட நெல்மணிகள் போல அலை மோதினர்.

நேற்று மாலை 6 மணியளவில் மங்கள நாதஸ்வர இசையுடன் முத்தமிழ் விழாவின் கடைசிநாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. சுமார் ஒரு மணி நேரம் முற்றவெளியும் யாழ். நகரமும் நாதஸ்வர இசையில் மூழ்கிக் கிடந்தன. தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் விடுதலைப் புலிகளின் திறப்புரை நிகழ்ச்சி தொடங்கியது.

வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. மனோ, யாழ். மாவட்டத் தளபதி திரு. தினேஷ், திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த புலிகள் பொறுப்பாளர் திரு. ரவி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி, வன்னிப் பிராந்திய கலை பண்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. போஜன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் திறப்புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் சிறப்புரை நிகழ்த்தினார்.

அதன் பின்னர் —

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரின் ''கொடியரின் கொடுமை'' என்ற நாட்டிய நாடகமும், பொன். சுந்தரலிங்கம் குழுவினரின் இசைச் கச்சேரியும், நாடக அரங்கக் கல்லூரியின் ''உயிர்த்து வந்த மனிதர் கூத்து'' நாடகமும், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் போர்க்காலப் பாடல் மெல்லிசை நிகழ்ச்சியும் இடம் பெற்றன. (அ-5)

## சிங்கள அரசு..

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடந்த இவ்விழாவில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த ஜனவரி வருடப் பிறப்'யன்று, யுத்த நிறுத்தம் அறிவித்து நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று நாம் அறிவித்திருந்தோம். இந்தப் பிரகட னத்தை நாம் சுயாதீனமாகச் செய்யவில்லை.

உலக நாடுகளும், நேசநாடுகளும், எமது போராட்டத்துக்கு ஆதரவு தரும் நேச சக்திகளும் கேட்டதற்கு இணங்கவே இந்த யுத்த நிறுத்த அறிவிப்பை நாம் விடுத்தோம்.

பேச்சுக்காக நாம் விடுத்த நேர்மையான அறிவிப்பைச் சிங்கள அரசு தப்பாகப் புரிந்து கொண்டது. பலவீனம் அடைந்த நிலையிலேயே புலிகள் பேச்சுக்கு வருகிறார்கள் என்று சிங்கள அரசு நினைத்தது.

இந்தியப் படையுடனும், சிங்களப் படையுடனும் யுத்தம் நடத்தி, பலம் இழந்த நிலையில் புலிகள் பேச்சுக்கு வருகிறார்கள் என்று சிங்கள அரசு கருதியதால், எமது கோரிக்கைகளை அது ஏற்கவில்லை; தவறாக மதிப்பீடு செய்து யுத்தத்தை தொடர்ந்தது.

### புலிகளின் பலம்

யுத்தம் தொடங்கி ஒரு வருடமாகிறது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவ ரீதியாகப் பலம்மிக்கதாகவே உள்ளது.

வடக்கில் எதிரியின் நோக்கம் ஈடேறவில்லை. பெரும் இழப்புக்களைச் சந்தித்தும், முக்கிய கேந்திர நிலையங்களை இழந்து நிற்கிறான். வடக்கு - கிழக்கில் பெரும் பகுதி புலிகளின் வசம் வீழ்ந்துள்ளது.

புலிகளின் பலத்தைக் கண்டு தாம் போட்ட தப்புக் கணக்கையிட்டு இன்று அரசு சிந்திக்கிறது.

யுத்தத்தைதொடரமுடியாத நிலையில் ஸ்ரீலங்கா அரசுக்குக் கடன் வழங்கும் நாடுகள் கொழும்பில் பெரிய அழுத்தத்தை போட்டுள்ளன. ஸ்ரீலங்கா அரசு மனித உரிமை மீறல்களை நடத்துவதால் அந்த நாடுகள் அரசு மீது ஏமாற்றமும், வெறுப்பும் அடைந்துள்ளன. தமது உதவிகளிலேயே இலங்கை அரசு யுத்தம் நடத்துகின்றது என்பதையும் இந்த நாடுகள் உணர்ந்துள்ளன. யுத்தம் தொடர்ந்தால், தமிழர் பிரச்சினை தீர்க்கமுடியாது என்ற அழுத்தத்தையும் அந்நாடுகள் இலங்கை அரசுக்கு கொடுத்துள்ளன.

### கொழும்பு குழம்பியுள்ளது

இந்த அழுத்தங்கள், நிதி நெருக்கடி; தோல்விகள் ஆகியன மீண்டும் பேச்சை ஆரம்பிக்க வேண்டிய நிலைக்கு இலங்கையைத் தள்ளியுள்ளன. வேறு வழியில்லாத நிலையில் கொழும்பு குழம்பியுள்ளது.

இலங்கை அரசு இராணுவ மேலாதிக்கத்தில் இருந்தே எம்முடன் பேச விரும்புகிறது. இன்று புலிகளே இராணுவ மேலாதிக்கத்தில் உள்ளனர் என்பதை அரசு உணர்ந்துள்ளது.

இந்த நேரத்தில் புலிகளுடன் பேசலாமா? இராணுவ மேலாதிக்கத்தை பெற்றபின் பேசலாமா? என்று கொழும்பு குழம்பிப்போய் இருக்கிறது.

அதே நேரம் மந்திரிசபையில் யுத்தநிலை மற்றும் பேச்சுவார்த்தை குறித்து மூன்றுவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. பேச்சுக்கு போவோம் என்றும், பொறுத்துப் பார்ப்போம் என்றும், இராணுவத்துக்கு மேலும் அவகாசம் வழங்கி புலிகளைப் பலவீனப்படுத்த முயற்சிப்போம் என்ற மூன்று கருத்துடைய முத்தரப்பார் மந்திரி சபையில் உள்ளனர். அதனால் அவர்கள் குழம்பிப் போயுள்ளனர்.

முதலில் பெரும்படை எடுப்பை நடத்தி, வேறுபகுதிகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டோம் என்று காட்டியபின் பேச்சு நடத்த அரசு முயற்சிக்கிறது.

நிபந்தனையற்ற பேச்சுக்கு இலங்கை அரசு தயார் என்றால் நாமும் தயார். எந்த நிபந்தனையையும் ஏற்கமாட்டோம். பேச்சு கொழும்பில் நடத்த முடியாது. யாழ்ப்பாணத்தில் அல்லது வெளிநாட்டிலேயே பேச்சு நடக்க வேண்டும்''—என்றார்.

## வவுனியாவில் நேற்றும் மோதல்

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் நேற்று மூன்றாவது நாளாகவும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் தொடர்ந்தன.

இராணுவத்தினருக்கு உதவியாக தொடர்ச்சியான வான் தாக்குதல்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

எனினும் விடுதலைப் புலிகள் போராளிகள் சளைக்காது பதிலடி கொடுத்து வருகின்றனர். (ஒ-15)

## அ, தி. மு. க..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் கருணாநிதி தலைமையிலான தி. மு. க. — ஜனதா தள் மற்றும் தோழமைக் கட்சிகளின் கூட்டணி மிக மோசமான நிலையில் படு தோல்வியடைந்தது.

கலைக்கப்பட்ட தமிழக சட்டசபையில்—கலைஞர் கருணாநிதியின் அரசில்—அங்கம் வகித்த பல முன்னாள் அமைச்சர்கள் மண்கவ்வினர்.

தி.மு.க. ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் கலைஞர் எதிர் கொண்ட பெரும் தேர்தல் தோல்வி இது என்று வர்ணிக்கப்பட்டது.

கலைஞரின் சகாக்கள் பலர் தோற்கடிக்கப்பட்ட போதும் கருணாநிதி மட்டும் தமது தொகுதியில் வெற்றிபெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்.

அ. இ. அ. தி. மு. க. அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொள்வது உறுதி என்பதால் காங்கிரஸ் மற்றும் தோழமைக் கட்சிகளின் உதவியின்றியே அக்கட்சி ஆட்சி அமைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

## இராணுவ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை —

வவுனியாச் சண்டையில் அரசுப் படைகள் ஹெலிக்கொப்டர்கள் மற்றும் போர் விமானங்களைப் பயன்படுத்தி வருவதால் அவற்றை தொலைவில் இருந்து தாக்கும் ஆயுதங்களைத் தாம் பயன்படுத்தி வருவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (உ-எ)

## கருணாநிதி..

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாறி முன்னணியில் இருந்தனர்.

அதிகாலையில் கலைஞர் கருணாநிதி 2 ஆயிரம் அதிகப்படியான வாக்குகளில் முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. [உ-த]

## வவுனியா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ஜெயசீலி— (சுதர்ஸினி சுந்தரலிங்கம்— பருத்தித்துறை)

★ அருணா— (நவமணி சின்னையா— புலோலி)

★ வசுமதி— (தவநாயகி இராசநாயகம்— முல்லைத்தீவு) (உ-த)

## லோகசபை முடிவுகள்

புதுடில்லி, ஜூன் 17

நேற்று நள்ளிரவு வரை அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின்படி கட்சிகள் பெற்ற ஆசனங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| ★ மொத்த ஆசனங்கள் | — 543 |
| ★ தேர்தல் நடந்தவை | — 511 |
| ★ வெளியான முடிவுகள் | — 136 |
| ★ இந்திரா காங்கிரஸ் | — 85 |
| ★ பாரதீய ஜனதா | — 35 |
| ★ ஜனதா தள் கூட்டணி | — 11 |
| ★ கம்யூ. கட்சி. | — 01 |
| ★ அ. தி. மு. க. | — 01 |
| ★ ஜனதாதள் [ஜி] | — 01 |
| ★ சிவசேனா | — 01 |

இதேவேளை —

எண்ணப்பட்டுக்கொண்டிருக்கும் வாக்குகளின்படி இந்திரா காங்கிரஸ் 139 தொகுதிகளிலும், பாரதீய ஜனதா 11 தொகுதிகளிலும் முன்னணியில் நிற்கின்றன.

## பாண்டிச்சேரி முடிவுகள்

சென்னை, ஜூன் 17

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபைத் தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ மொத்தத் தொகுதிகள் | — 30 |
| ★ முடிவு வெளியானவை | — 18 |
| ★ இந்திரா காங்கிரஸ் | — 11 |
| ★ அ. இ. அ. தி. மு. க. | — 03 |
| ★ தி. மு. க. | — 02 |
| ★ ஜனதா தள் | — 01 |
| ★ சுயேச்சை | — 01 |

## தமிழக முடிவுகள்

இன்று அதிகாலை வரை அறிவிக்கப்பட்ட தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் வருமாறு:-

| | |
|---|---|
| ★ மொத்த தொகுதிகள் | — 234 |
| ★ தேர்தல் நடந்தவை | — 232 |
| ★ வெளியான முடிவுகள் | — 58 |
| ★ அ. தி. மு. க | — 38 |
| ★ இ. காங்கிரஸ் | — 19 |
| ★ மார்க்ஸிஸ கம்யூ. | — 01 |
| ★ தி. மு. க. | — 00 |

## காங்கிரஸ் முன்னணி

புதுடில்லி, ஜூன் 17

இந்தியாவின் பத்தாவது நாடாளு மன்றத்துக்கான பொதுத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி அதிக இடங்களைப்பெறும் நிலையில் இருப்பதாக இன்று அதிகாலையில் அறிவிக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்ட முடிவுகளில் பெரும்பாலானவற்றை காங்கிரஸ் கட்சியே கைப்பற்றியிருந்தது. மேலும் 150 அதிகமான இடங்களில் இக்கட்சி வேட்பாளர்கள் இன்று அதிகாலையில் வாக்கு எண்ணப்படும் போது முன்னணியில் இருந்தனர்.

இக்கட்சி தனித்து ஆட்சி அமைக்கக் கூடியதாக தனிப் பெரும்பான்மை பலத்தைப் பெறுமா என்பது இன்று காலையில் தெரியவரும் என எதிர்பார்க்கப்பட்டது.

கர்நாடகம், வடக்கு, கிழக்கு மாநிலங்களான திரிபுரா, அஸாம், அருணாசலப் பிரதேசம், மணிப்பூர், மிஸோராம், மாராட்டிய மாநிலம், ஹரியானா, ராஜஸ்தான் ஆகிய இடங்களில் காங்கிரஸ் கட்சியும், கேரளா, தமிழ் நாடு ஆகிய இடங்களில் காங்கிரஸ் கூட்டணியும் முன்னணியிலுள்ளன.

ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சியும் குஜராத்தில் பாரதீய ஜனதா கட்சியும் முன்னணியிலுள்ளன.

பீஹாரில் ஜனதா தள் முன்னணியில் நிற்கிறது.

## இப்போது..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடிக்கிறார்'' என்று கூறிய போதே —

தலைவர் பிரபாகரன் முன் கண்டவாறு குறிப்பிட்டதாக கலாநிதி பாலசிங்கம் சொன்னார். [அ-3]

## மரண அறிவித்தல்

### தம்பு தியாகராசா

(முன்னாள் காலி வர்த்தகர்)

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது யாழ்ப்பாணம் 37/21, பிறவுண் றோட், 1ஆம் ஒழுங்கையில் வசித்தவருமாகிய தம்பு தியாகராசா 17-6-91இல் சிவபதம் அடைந்து விட்டார். இவர் இராசலெட்சுமியின் அன்புக் கணவரும், சிவானந்தசோதி (நகைக்கடை), கலாவல்லி, திலகவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்நாதன், கேதாரநாதன், தனலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவக்கொழுந்து, காலம்சென்ற ஏரம்பபிள்ளை, பராசக்தி, காலம்சென்ற சிவனேசம், பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனுஜா, பிரியா, சதீஸ், கிரிஜா, கஸ்தனி, நிலானீ ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

தி. சோதி (மகன்)

37/21, பிரவுண் றோட், 1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [17106]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-06- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org